சுருக்கம்

தமிழ்நாடு பூமிதான வாரியம் – தமிழ்நாடு பூமிதான வாரியச் சட்டம் 1958 –இன் கீழ் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [நி.சீ.1(1)] துறை

அரசாணை (நிலை) எண்.493 நாள்: 23.12.2009

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.40, ஊரக வளர்ச்சி துறை, நாள் 7.2.1997.
2. அரசாணை (நிலை) எண்.238, ஊரக வளர்ச்சி துறை, நாள் 4.9.2000.
3. அரசாணை (நிலை) எண்.144, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.10.2006.
4. தனி அலுவலர், தமிழ்நாடு பூமிதான வாரியம் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர் கடிதம் எண்.ந.க.1/2001/பூ.வா.1, நாள் 31.3.2008.

–––

ஆணை:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு பூமிதான வாரியச் சட்டம், 1958 [1958– ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் XV] இன்படி தமிழ்நாடு பூமிதான வாரியத்தை திருத்திய முறையில் அமைக்கும் பொருட்டு மாண்புமிகு முன்னாள் கதர் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் மற்றும் நான்கு அலுவல் சார்ந்த உறுப்பினர்களை கொண்டு நான்கு ஆண்டுகளுக்கு நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. பின்னர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு பூமிதான வாரியச் சட்டம் 1958 [1958– ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் XV] பிரிவு 4, உட்பிரிவு–(1)இன்படி தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்கு ஏழு அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமனம் செய்து ஆணையிடப்பட்டது. இதன்படி தமிழ்நாடு பூமிதான வாரியம் அதன் தலைவர் நீங்கலாக நான்கு அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் ஏழு அலுவல்சாரா உறுப்பினர்கள் பணியாற்றும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் நான்கு ஆண்டு பதவிக்காலம் 6.2.2001 உடன் முடிவடைந்தது.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தனது கட்டுப்பாட்டில் இருந்த தமிழ்நாடு பூமிதான வாரியம் தொடர்பான பொருண்மையை பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணை (நிலை) எண்.144, நாள் 11.10.2006–இன்படி வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டிற்கு மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

4. தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் நான்கு ஆண்டு பதவி காலம் 6.2.2001 உடன் முடிவடைந்த நிலையில் மீண்டும் மாண்புமிகு கதர்துறை அமைச்சர் தலைமையில்

Verified RealEstate™

கீழ்க்கண்ட நான்கு அலுவல்சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் பூமிதான இயக்கம் குறித்து நன்கு தெரிந்த சர்வோதய தலைவர்கள்/சமூக சேவகர்கள் மற்றும் அதிக அளவில் பூமிதானம் அளித்த தானதாரர்கள் அல்லது அவர்களது வாரிசுகளில் தேர்வு செய்யப்பட்ட பத்து நபர்களை அலுவல்சாரா உறுப்பினர்களாக நியமிக்க பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் நிலச்சீர்திருத்த ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

5. நிலச்சீர்திருத்த ஆணையரின் செயற்குறிப்பை ஆய்வு செய்தபின் தமிழ்நாடு பூமிதான வாரியச் சட்டம் 1958 [1958– ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் XV] பிரிவு 4(1) இன்படி தமிழ்நாடு பூமிதான வாரியத்தை திருத்திய முறையில் அமைக்கும் பொருட்டு மாண்புமிகு கதர் துறை அமைச்சர் தலைமையில் கீழே வரிசை எண்.2 முதல் 5 வரையில் உள்ள நான்கு நபர்களை அலுவல் சார்ந்த உறுப்பினர்களாகவும் கீழே வரிசை எண்.6 முதல் 15 வரையில் உள்ள 10 நபர்களை அலுவல்சாரா உறுப்பினர்களாகவும் ஆணை வெளியிடும் தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | மாண்புமிகு கதர் துறை அமைச்சர் | தலைவர் |
| 2. | ஆணையர், நிலச்சீர்திருத்தத் துறை, சென்னை–5. | உறுப்பினர் செயலாளர் |
| 3. | அரசுச் செயலாளர், வருவாய்த்துறை, சென்னை–9. | உறுப்பினர் (அலுவல்) |
| 4. | ஊரக வளர்ச்சி இயக்குநர் | உறுப்பினர் (அலுவல்) |
| 5. | வேளாண்மைத் துறை இயக்குநர் | உறுப்பினர் (அலுவல்) |
| 6. | திரு. எஸ்.எஸ். நாராயணன், தலைவர் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி, எண்.ட்டி–41பி, 16வது குறுக்குத் தெரு, பெசன்ட் நகர், சென்னை–90. | உறுப்பினர் |
| 7. | திரு. என். சுந்தர்ராஜன், சர்வோதயா இல்லம், எம்.பி.நகர், வாடிப்பட்டி, மதுரை – 625 218. | உறுப்பினர் |
| 8. | திரு. எஸ்.பி.முனியாண்டி, தலைவர், இராமநாதபுரம் மாவட்ட சர்வோதய சங்கம், திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்–626 125. | உறுப்பினர் |
| 9. | திரு. எஸ். லோகநாதன், நிர்வாக இயக்குநர், சர்வ சேவா பண்ணைகளின் குழுமம் (ASSEFA) 279, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, சென்னை –600014. | உறுப்பினர் |

Verified RealEstate

10. திரு. ஆர். ராமச்சந்திரன், தலைவர், மாவட்டசர்வோதய சங்கம், எண்.1416, திருநகர், நாஞ்சிகோட்டைசாலை, தஞ்சாவூர் – 613 006. — உறுப்பினர்

11. திரு.வி. முருகன்,அகம்படியார் தெரு, கொட்டாம்பட்டி அஞ்சல், மதுரை மாவட்டம் – 625 103. — உறுப்பினர்

12. திரு.கே.ஆர். கண்ணன், 2/170 வி. குடியிருப்பு, நல்லுக்குறிச்சி அஞ்சல், முதுகுளத்தூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் 623 601. — உறுப்பினர்

13. திரு.கே.கே.ஜி. முத்தையா, கடவூர் கிராமம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம். — உறுப்பினர்

14. திரு.எம்.கே. ஜவஹர்பாபு, 9/4 வல்லபாய் ரோடு, சொக்கிகுளம், மதுரை – 625 002. — உறுப்பினர்

15. திரு. எம்.ஜி.எஸ். ராமகிருஷ்ணா, பண்ணை இல்லம், முனைஞ்சிப்பட்டி, நாங்குநேரி வட்டம்–627 355. திருநெல்வேலி மாவட்டம். — உறுப்பினர்

6. கீழே குறிப்பிட்டுள்ள அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளிடப்படும்.

அறிவிக்கை

தமிழ்நாடு பூமிதான வாரியச் சட்டம் 1958 [1958–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் XV] பிரிவு 4, உட்பிரிவு (1)–இன்படி தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்கு மாண்புமிகு கதர் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் மற்றும் கீழே வரிசை எண்.2 முதல் 5 வரையில் உள்ள நான்கு நபர்களை அலுவல் சார்ந்த உறுப்பினர்களாகவும், கீழே வரிசை எண்.6 முதல் 15 வரையில் உள்ள 10 நபர்களை அலுவல்சாரா உறுப்பினர்களாகவும் ஆணை வெளியிடும் தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் நியமனம் செய்கிறார்.

Verified RealEstate™

| வ.எண். | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | மாண்புமிகு கதர் துறை அமைச்சர் | தலைவர் |
| 2. | ஆணையர், நிலச்சீர்திருத்தத் துறை, சென்னை–5. | உறுப்பினர் செயலாளர் |
| 3. | அரசுக்செயலாளர், வருவாய்த்துறை, சென்னை–9. | உறுப்பினர் (அலுவல்) |
| 4. | ஊரக வளர்ச்சி இயக்குநர் | உறுப்பினர் (அலுவல்) |
| 5. | வேளாண்மைத் துறை இயக்குநர் | உறுப்பினர் (அலுவல்) |
| 6. | திரு. எஸ்.எஸ். நாராயணன்,<br>தலைவர் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி, எண்.ட்டி–41பி, 16வது குறுக்குத் தெரு, பெசன்ட் நகர், சென்னை–90. | உறுப்பினர் |
| 7. | திரு. என். சுந்தர்ராஜன்,<br>சர்வோதயா இல்லம், எம்.பி.நகர், வாடிப்பட்டி, மதுரை – 625 218. | உறுப்பினர் |
| 8. | திரு. எஸ்.பி.முனியாண்டி,<br>தலைவர், இராமநாதபுரம் மாவட்ட சர்வோதய சங்கம், திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்– 626 125. | உறுப்பினர் |
| 9. | திரு. எஸ். லோகநாதன்,<br>நிர்வாக இயக்குநர், சர்வ சேவா பண்ணைகளின் குழுமம் (ASSEFA) 279, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, சென்னை –600014. | உறுப்பினர் |
| 10. | திரு. ஆர். ராமச்சந்திரன்,<br>தலைவர், மாவட்டசர்வோதய சங்கம், எண்.1416, திருநகர், நாஞ்சிகோட்டை சாலை, தஞ்சாவூர் – 613 006. | உறுப்பினர் |
| 11. | திரு.வி. முருகன்,<br>அகம்படியார் தெரு, கொட்டாம்பட்டி அஞ்சல், மதுரை மாவட்டம் – 625 103. | உறுப்பினர் |
| 12. | திரு.கே.ஆர். கண்ணன்,<br>2/170 வி குடியிருப்பு, நல்லுக்குறிச்சி அஞ்சல், முதுகுளத்தூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் 623 601. | உறுப்பினர் |

Verified RealEstate™

| | | |
|---|---|---|
| **13.** | திரு.கே.கே.ஜி. முத்தையா, கடவூர் கிராமம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம். | உறுப்பினர் |
| **14.** | திரு.எம்.கே. ஜவஹர்பாபு, 9/4 வல்லபாய் ரோடு, சொக்கிகுளம், மதுரை – 625 002. | உறுப்பினர் |
| **15.** | திரு. எம்.ஜி.எஸ். ராமகிருஷ்ணா, பண்ணை இல்லம், முனைஞ்சிப்பட்டி, நாங்குநேரி வட்டம்–627 355. திருநெல்வேலி மாவட்டம். | உறுப்பினர் |

(ஆளுநரின் ஆணைப்படி

கி. தனவேல்,
அரசு செயலர்.

பெறுநர்

இயக்குநர், அரசு எழுதுப் பொருள் மற்றும் அச்சுத்துறை,
110, அண்ணா சாலை, சென்னை–600 002.
[பத்தி 6 மட்டும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்]
மாண்புமிகு அமைச்சர் (கதர்), புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை –9.
ஆணையர், நிலச் சீர்திருத்தத்துறை, சென்னை –5.
செயலர், வருவாய்த்துறை, தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–9.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ், சென்னை –15.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை –5.
திரு.எஸ்.எஸ். நாராயணன், தலைவர் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் கூட்டமைப்பு,
தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி, எண்.ட்டி–41/பி, 16வது குறுக்குத் தெரு, பெசன்ட் நகர்,
சென்னை–600 090.
திரு. என். சுந்தர்ராஜன், சர்வோதயா இல்லம், எம்.பி.நகர், வாடிப்பட்டி, மதுரை – 625 218.
திரு.எஸ்.பி.முனியாண்டி, தலைவர், இராமநாதபுரம் மாவட்ட சர்வோதய சங்கம்,
திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்–626125
திரு. எஸ். லோகநாதன், நிர்வாக இயக்குநர், சர்வ சேவா பண்ணைகளின் குழுமம்
(ASSEFA) 279, அவ்வை சண்முகம்
சாலை, இராயப்பேட்டை, சென்னை –600 014.
திரு. ஆர். இராமச்சந்திரன், தலைவர், மாவட்ட சர்வோதய சங்கம்,
எண்.1416, திருநகர், நாஞ்சிகோட்டை சாலை, தஞ்சாவூர் – 613 006.
திரு.வி. முருகன், அகம்படியார் தெரு, கொட்டாம்பட்டி அஞ்சல்,
மதுரை மாவட்டம் – 625 103.
திரு.கே.ஆர். கண்ணன், 2/170 வி குடியிருப்பு, நல்லுக்குறிச்சி
அஞ்சல், முதுகுளத்தூர் வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம் 623 601.
திரு.கே.கே.ஜி. முத்தையா, கடவூர் கிராமம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.

Verified RealEstate™

திரு.எம்.கே. ஜவஹர்பாபு, 9/4 வல்லபாய் ரோடு, சொக்கிகுளம்,
மதுரை – 625 002.
திரு. எம்.ஜி.எஸ். ராமகிருஷ்ணா, பண்ணை இல்லம், முனைஞ்சிப்பட்டி, நாங்குநேரி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்–627 355.

நகல்

முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை – 5.
முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5.
முதன்மைச் செயலர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர், சென்னை – 5.
ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
இயக்குநர், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித்துறை, சென்னை–5.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பணி–ஏ) துறை, சென்னை–9.
பொதுத் (சிறப்பு ஏ) துறை, சென்னை–9.
வேளாண்மைத்துறை, சென்னை–9.
வருவாய்த்துறை,(அனைத்துப் பிரிவுகள்) சென்னை–9.
தலைமைக் கணக்கு அலுவலர், சென்னை–18. (பெயரில்)
தலைமைக் கணக்கு அலுவலர், சென்னை–9.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
பொது மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை–9.
இயக்குநர், நிலச்சீர்திருத்தத்துறை, சென்னை–5.
வேளாண்மைத் துறை இயக்குநர், சென்னை–5.
இ.கோ/உதிரி

Verified RealEstate ™